**சுங்க திணைக்களத்தின் சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொழிநுட்ப தொடர்பாடல் நிதியம் - 2025**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க திணைக்களத்தின் சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 27 ஆம் பந்தியின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள், பிற நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகளின் விளைவுகள் நம்பகமான மற்றும் நேர்மையான முறையில் குறிப்பிடப்பட வேண்டியிருப்பதால், ஒரு நிறுவனம் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றின் முறையான கணக்குப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் பராமரிக்க வேண்டும். இருப்பினும், நிதி தொடர்பாகத் தனித்தனி ரொக்கப் புத்தகங்கள், சேவை வருமானம் பேரேடுகள், விற்பனைப் பேரேடுகள் மற்றும் மேலதிக நேரம், கடன்பட்டோர் பேரேடுகள் ஆகியவை பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் கணினிகளைப் பயன்படுத்தி Excel விரிதாள்களுக்குப் பதிலாகப் பேரேடுகளைப் பராமரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. | நிதியத்தின் அனைத்துப் கொடுக்கல் வாங்கல்களையும் முறையாக அடையாளம் கண்டு பதிவு செய்வதற்காக, சம்பந்தப்பட்ட முதன்மைப் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் பேரேடுகள் சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும் |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் விமான மற்றும் கப்பல் நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 39,816,451 கட்டணமானது, அந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் மிகைநேர வருமானமாக அங்கீகரிக்கப்பட்டதன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான வருமானம் அந்தத் தொகையால் மிகைப்படுத்தப்பட்டது. | சுங்கத் திணைக்களத்தின் பிரதான நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாக மட்டுமே பராமரிக்கப்படும் இந்த நிதியத்தின் நிதி அமைப்பு, குறிப்பாக அத் திணைக்களத்தின் உள்ளகச் சீராக்கம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஒரு பகுதியாகவே செய்யப்படுகின்றன. | சம்பந்தப்பட்ட கணக்கீட்டு காலத்திற்குரிய வருமானம் மட்டுமே சரியாக அடையாளம் காணப்பட்டு, அந்த ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுங்க உத்தியோகத்தர்களுக்கும் திரட்டு நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தகவல் மற்றும் தொழிநுட்ப தொடர்பாடல் கட்டணங்களின் கூட்டுபெறுமதி ரூபா 2,496,000 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி நிதி நிலைமைக் கூற்றினுள் ரூபா 3,744,000 என காண்பிக்கப்பட்டிருந்தமையினால் செலுத்தப்பட வேண்டிய தகவல் மற்றும் தொழிநுட்ப தொடர்பாடல் கட்டணங்கள் ரூபா 1,248,000 இனால் மிகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா. 4,992,000 தொகையில், ரூபா. 3,747,000 தொகை 2025 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய பெறுமதியான ரூபா 1,248,000 தொகையானது, 2025 ஆம் ஆண்டுக்குச் செலுத்த வேண்டிய தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது. | ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களினுள் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய 07 விமான கம்பனிகளிடமிருந்து பெற வேண்டிய மொத்தத் தொகையான ரூபா 3,088,500 மற்றும் உதவியின்றி வரும் பயணிகளின் உடைமைகளை விடுவிக்கும் பணிகளை மேற்கொள்ளும் ஒரு நிறுவனத்திடமிருந்து பெற வேண்டிய ரூபா 1,845,750 ஆகியவை நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாமை காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியில் இருந்த மொத்த வருமானம் மற்றும் கடன்பட்டோர் நிலுவைத் தொகை என்பன ரூபா. 4,934,250 கூட்டுதொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | மேற்கண்ட பிழைகள் கண்டறியப்பட்டு, ஏற்கனவே அவற்றைச் சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | அந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் சரியாக இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சரியாகக் கண்டறியப்பட்டு குறிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் ஒரு விமான கம்பனியிடமிருந்து ரூபா 522,000 அறவிப்பட்டதாக தவறாக கணக்கீடு செய்யப்பட்டமை காரணமாக கடன்பட்டோர் மீதி அத் தொகையால், குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும், மற்றொரு விமான நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,447,500 பெறுமதியான ஒரு விலைப்பட்டியலின் பெறுமதி கடன்பட்டோர் பேரேட்டில் ரூபா 595,500 எனப் பதிவு செய்யப்பட்டதால், மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் மீதி ரூபா 852,000 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | குறைவாகக் காட்டப்பட்ட விலைப்பட்டியல் பெறுமதிகள் மற்றும் ஒரு கணிதப் பிழை காரணமாக ஏற்பட்ட ரூபா 852,000 வித்தியாசத்தை சரிசெய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்ககப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் மீதிகள் நிதிக் கூற்றுக்களில் சரியாகப் பிரதிபலிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது 03 விமான கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 1,041,000 தொகை கடன்பட்டோர் பேரேட்டில் கணக்கீடு செய்யப்படாமை காரணமாக ஆண்டின இறுதியில் கடன்பட்டோர் மீதி அப்பெறுமானத்தினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய பெறுவனவு கைதவறாக பேரேட்டில் பதிவு செய்யப்படாமல் இருந்ததுடன் தற்போது பெறுவனவு சரியாக பதிவு செய்யப்பட்டு கடன்பட்டோர் மீதியை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டடுள்ளது. . | கடன்பட்டோர் மீதிகள் நிதிக் கூற்றுக்களில் சரியாகப் பிரதிபலிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இனங்காணப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி (ரூபா) | அண்மித்த அறிக்கை யின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | பெறுமதி (ரூபா) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| கடன்பட்டோர்<br>- கப்பல் கம்பனி<br>- விமான கம்பனி | 2,076,000<br>1,121,100 | 4,037,568<br>- | 1,961,568<br>1,121,100 | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட படி, கடன் மீதியைத் துல்லியமாகக் கண்டறிவதற்கான ஒரு வழிமுறையை வகுக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | கடன்பட்டோர் நிலுவைகளில் உள்ள முரண்பாடுகள் இனங்காணப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை (ரூபா) . | சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| மேலதிக நேர கப்பல் சரக்கு பரிசோதனை கட்டணங்கள் தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் கட்டணங்கள் | 1,531,222,936 | சேவைக்கு சமூகமளித்தமை உறுதி செய்யும் கைவிரல் அடையாள அறிக்கை | சுங்க திணைக்களத்தின் மேலதிக நேரம் தாபன விதிக் கோவையின் கட்டணங்கள் தொடர்பான IX ஆம் அத்தியாயத்தன் 1.1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இனங்க வெளிப்புறத் தரப்பினரிடமிருந்து வசூலிக்கப்படும் சேவைக் கட்டணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் செய்யப்படும். மேலதிக நேர ஊதிய விகிதங்களைக் கணக்கிடுவதற்காக 2004.02.09 ஆந் திகதிய ஆம் நி/1/சு/47/3 ஆம் இலக்க நிதி அமைச்சின் செயலாளரின், கடிதத்தின் மூலம், தற்போதைய மாதாந்த திரட்டிய சம்பளத்தில் 240 இன் ஒரு பகுதியாக கணக்கிடப்பட்டு கொடுப்பனவு செய்வதற்குஅங்கீகாரம் அளித்திருந்த போதிலும், தற்போது அந்தக் கொடுப்பனவுகள் அந்த விகிதங்களை விடக் குறைவான விகிதத்தில் செய்யப்பட்டு வருகின்றன | பொதுக் கணக்குக் குழுவின் போது வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் சுங்க அதிகாரிகள் கைரேகைப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டியதுடன், ஆண்டுக்கான செலவினங்களைச் சரிபார்க்க அந்த அறிக்கைகளைத் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 ஒக்தோபர் 26 திகதிய 1520/17 திகதிய இலங்கை சனநாயக | சுங்க மேலதிக நேரக் வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் கணக்கிலிருந்து சுங்க | சுங்க மேலதிக நேரக் வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணம் கணக்கிலிருந்து சுங்க | குறித்த காலப்பகுதிக்கான வரத்தமானியின் ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சோசலிய குடியரசின் அதி விசேட வரத்தமானி பத்திரிக்கை | உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்று காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான நடைமுறையொன்று அங்கீகரிக்கப்படாமல் மீளாய்வாண்டில் சுங்க மேலதிக நேரக் வேலை, கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டணங்களாக ரூபா 1,518,243,736 தொகை உத்தியோகதத்ர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளரின் MF1/4/CUS/474 மற்றும் 2010.11.09 திகதிய கடிதத்தின் ஊடாக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | பிரகாரம் அங்கீகாரத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2013 மார்ச் 01 ஆந் திகதிய 855 ஆம் இலக்கம், 2018 ஒக்டோபர் 01 ஆந் திகதிய இலக்கம் 1274 மற்றும் 2024 செப்தெம்பர் 25 ஆந் திகதிய 1664 ஆம் இலக்க திணைக்கள கட்டளைகள் | 2004 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்கான மேலதிக நேரக் கொடுப்பனவு வீதம் 45 சதவீதத்தினாலும் அதிகரிப்பதற்கும், 50 சதவீதத்தினாலலும் 50 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும் மேலதிக நேரக் வேலை குழுவின் இறுதி பரிந்துரையின் அடிப்படையில் சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும். இந்த கட்டளைகள் வெளியிடப்படுவதற்கு மேலதின நேரக் வேலை குழுவின் இறுதி பரிந்துரைகள் கிடைத்ததாக அல்லது நிதி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. | உள்ளக கட்டளைகள் இலக்கம் 855, 1274 மற்றும் 1664 ஆகிய மூலம் மேலதிக நேர ஊதிய விகிதங்கள் 09.02.2004 ஆம் ஆந் திகதிய நிதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் நடப்புச் சம்பளத்தின் அடிப்படையில் மேலதிக் நேர ஊதியம் வழங்கவும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் படி, 2004 ஆம் ஆண்டு முதல் மேலதிக நேர ஊதியத் தொகை அவ்வப்போது திருத்தப்பட்டு வழங்கப்பட்ட போதிலும், 2004 ஆம் ஆண்டில் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தை விட மிகைத்து ஒருபோதும் ஊதியம் வழங்கப்படவில்லை. | மேலதிக விகிதங்களை திருத்தம் செய்யும் போது நேரக் வேலை குழுவின் பரிந்துரையுடன் நிதி அமைச்சின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 414,814,532 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 167,004,158 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 247,810,374 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டிற்கு இணையாக மீளாய்வாண்டில மேலதிக நேர செலுத்துதல், ரூபா 451,682,462 இனால் அதிகரித்திருந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுங்கம் மற்றும் ஏனைய சேவைகளின் உத்தியோகத்தர்களால் மேலதிக சேவையில் ஈடுபடுவது தொடர்பாக நடத்தப்பட்ட தெரிவு கணக்காய்வின் போது, இலங்கைச் சுங்கத்தின் 05 பிரிவுகளைச் சேர்ந்த 09 முதல் 77 உத்தியோகத்தர்கள் கொண்ட ஒரு குழுவினர், 2025 திசெம்பர் மாதத்தின் 10 வார இறுதி விடுமுறை நாட்களில் “சுங்கம் 221” மிகைநேரப் பதிவேட்டில் கையொப்பமிட்டிருந்த மொத்தம் 18,225 மணிநேரம் மேலதிக நேரம் பணியாற்றியதாக குறிப்பிட்டு மேலதிக நேரப் படிகளையும் பெற்றுக்கொண்டிருந்த போதும் அந்நாட்களில் அப்பிரிவுகள் உத்தியோகப்பூர்வப் பணிகளுக்காகத் திறக்கப்படவில்லை என்பது சாவி ஒப்படைப்பு மற்றும் ஏற்புப் பதிவேடுகளை பரீட்சித்த போது கண்டறியப்பட்டது. மேலும், 2025 திசெம்பர் 15 முதல் 19 வரையிலான காலப்பகுதியில், அப்பிரிவுகளின் உத்தியோகத்தர்கள் மாலை 4.45 மணி முதல் மறுநாள் காலை 8.00 மணி வரை மிகைநேரம் பணியாற்றியதாக “சுங்கம் 221” மேலதகநேரப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் மாலை 4.30 மணிக்கும் இரவு 9.45 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மூடப்பட்டு சாவிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை சாவி ஒப்படைப்பு மற்றும் ஏற்பு ஆவணங்களின் பிரகாரம் உறுதி செய்யப்பட்டது. | சுங்க திணைக்களத்தின் மேலதிக நேரம் தாபன விதிக் கோவையின் கட்டணங்கள் தொடர்பான IX ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க வெளிப்புறத் தரப்பினரிடமிருந்து வசூலிக்கப்படும் சேவைக் கட்டணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் செய்யப்படுவதுடன் இலங்கை சுங்க திணைக்களத்தின் மேலதிக நேரம் கொடுப்பனவிற்குரிய விகிதங்களுக்காக நிதி அமைச்சின் செயலாளர் அங்கீகரித்த விகிதங்களை விட குறைந்த விகிதங்களில் தற்போது கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பான தற்போதுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் வலுப்படுத்தப்பட்டு வருகை மற்றும் வெளியேறுதலைச் சரிபார்க்க கைரேகை இயந்திரங்கள் அவசரமாக நிறுவப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2017 பெப்ரவரி 27 ஆந் திகதிய திணைக்கள கட்டளை இலக்கம் 1140 பிரகாரம், சுங்க கப்பல் சரக்கு பரிசோதனை கட்டணம் பெறப்படுவதற்கு தகைமை பெறுவதற்கு வார நாட்களில் மு.ப 06.00 இற்கு முன்னர் மற்றும் வார இறுதியில் மற்றும் விடுமுறை தினங்களில் மு.ப 09.00 இற்கு முன்னர் கடமைக்கு சமூகமளிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் அக்கட்டணத்திற்கு உரித்துகிடைக்க கூடாது. எனினும் இலங்கை சுங்க பதவியணியினரின் வருகை / வெளியேறல் உறுதி செய்யப்படாது 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரையில் ரூபா 3,674,877,847 ஆன தொகை கப்பல் சரக்கு பரிசோதனை கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்ட தொகையானது சுங்கப் படிவம் 221 இன் படி முறையாகக் கண்காணிக்கப்படுவதுடன். மேலும், அப்பெறுமதி பரிந்துரைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பொறுப்பு உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட சரியான தன்மையை உறுதிசெய்த பின்னரே பணம் செலுத்தப்படுகிறது. | சுங்க உத்தியோகத்தர் களின் வருகை மற்றும் வெளியேறுதலைச் சரியாக உறுதிப்படுத்த கைரேகை இயந்திரங்கள் நிறுவுவது தொடர்பாக அவசரமாக கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) மேலதிக நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 89,429,545 ஆக இருந்ததுடன் அம் மீதிகள் 17 கப்பல் கம்பனிகளிடமிருந்து 18 விமானக் கம்பனிகளிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 9,582,100 ஆன கடன்பட்டோர் மீதிகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு, நீண்ட காலமாக வசூலிக்கப்படுவது நிச்சயமற்றதாக இருந்த நிலுவைத் தொகைகளை அறவிடுவது குறித்த முறையான மதிப்பீடு இல்லாமலும், ஏற்றுக்கொள்ளத்தக்க கணக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றாமலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் காணப்பட்ட மொத்த கடன்பட்டோர் மீதியில் 03 சதவீதம், அதாவது ரூபா. 2,682,886, மட்டுமே அறவிட முடியாத கடன்களாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2019 முதல் 2024 வரையிலான காலப்பகுதிக்கான ரூபா. 9,582,100 நிலுவைத் தொகையில், கணக்காய்வு விசாரணைக்குப் பதிலளித்த திகதி (2026.06.05) வரை ரூபா. 2,209,425 அறவிடப்பட்டுள்ளது. மேலும், கடன்பட்டோர் காலப்பகுதி பகுப்பாய்வின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ள மொத்த கடன்பட்டோர் மீதியின் மீது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம், அறவிட முடியாக் கடன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கடன்பட்டோர் நிலுவைத் தொகைகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன். , கடன்பட்டோரிடமிருந்து அறவீடு செய்யும் திறன் குறித்து முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, அதற்கேற்ப போதுமான அறவிட முடியாக்கடன் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுங்க திணைக்களம் தொடர்பாக 2019 மார்ச் 07 ஆந் திகதி பொதுக் கணக்குக் குழு தொடர்பான செயற்குழு கூட்டத்தின் போது சுங்க திணைக்களத்தின் | சுங்கத்தில் அனைத்து உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல்களை பதிவு செய்வதற்கு கைரேகைப் பதிவு | 2019 மார்ச் 07 ஆந் திகதி மற்றும் அதன் பின்னர் நடைபெற்ற |

| | | |
|---|---|---|
| அனைத்து உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல்களை பதிவு செய்வதற்கு கைரேகைப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டுமென வழங்கப்பட்டுள்ள கட்டளையின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 594,960 செலவிடப்பட்டு 04 கைவிரலடையாள இயந்திரங்கள் நிறுவப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இவ்வியந்திரங்கள் பயன்படுத்தப்படாமை காரணமாக குறைப்பயன்பாட்டில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் அந்த இயந்திரங்களில் மென்பொருட்களை நாளதுவரையாக்குவதற்காக செலவிடப்பட்ட ரூபா 107,706 தொகையும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை வழங்காத செலவினமொன்றாக இருந்தது. | இயந்திரங்களை நிறுவுவதற்கு தற்போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கைரேகைப் பதிவு இயந்திரங்கள் மூலம் வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்வதற்கு சிரமமான மட்டத்தில் வெளிக்கள கடமை கையளிக்கபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக நடைமுறைச் சாத்தியமான தீர்வொன்று தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. | பொதுக் கணக்குக் குழு தொடர்பான செயற்குழு கூட்டத்தின் போது வழங்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் சுங்கத்தில் அனைத்து உத்தியோகத்தர்களால் கைவிரலடையால இயந்திரங்கள் பயன்படுத்த வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட திரட்டிய வருமானம் ரூபா. 1,934,085,374 ஆக இருந்த போதிலும், ஈட்டப்பட்ட உண்மையான வருமானம் ரூபா. 1,525,620,362 ஆக இருந்தமையால் மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா. 408,465,012 அல்லது 21 சதவீதம் பாதகமான விலகலொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. கப்பல் சரக்கு பரீட்சிப்புக் கட்டணங்கள் மற்றும் சுங்கத் தகவல் மற்றும் தொழில்நுட்பத் தொடர்பு கட்டணங்கள் மூலமான வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட அதிகமாக இருந்த போதிலும், சுங்க மேலதிக நேர வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும்போது 30 சதவீதம் அல்லது ரூபா. 485,668,247 ஆல் குறைவடைந்தமை ஒட்டுமொத்த பாதகமான விலகலுக்கு பிரதான காரணமாக இருந்தது. | கப்பல்கள் எதிர்பார்த்த பிரகாரம் வந்து சேராமை, பருவநிலை மற்றும் வானிலை காரணிகளால் விமானங்களின் வருகை குறைதல், மற்றும் உலகளாவிய ஏற்ற இறக்கங்களால் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியில் ஏற்படும் கட்டுப்பாடுகள் போன்ற அளவு மற்றும் பண்பு சார்ந்த காரணிகளின் எதிர்மறையான தாக்கமே இதற்குக் காரணம் என்பதாக நான் அவதானிக்கின்றேன். | முடிந்தவரை சரியான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகளைத் தயாரிக்கவும், அதற்கேற்ப செலவுகளைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |